**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 200 / 2016** |
| **Deposition of witness for** | **:** | **PW : 09** |
| **Name** | **:** | **திருமதி. காஞ்சனாதேவி** |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.10.2024**

எதிரிகள் 1,2 ஆஜர். எதிரி 4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த பெண் ஆய்வாளர் திருமதி.முத்துலெட்சுமி அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் சாட்சியம் அளிக்கும் நிலையில் இல்லை. அவரது கையொப்பங்கள் எனக்கு நன்கு பரிட்சையம். அதனால் ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.12.2009 ம் தேதி காலை 06.00 மணிக்கு காவல் ஆய்வாளர் திருமதி.முத்துலெட்சுமி அவர்கள், நிலைய பொறுப்பில் இருக்கும் போது, மேலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து தபால் மூலம் வரப் பெற்ற புகாரைப் பெற்று, மேலூர் காவல் நிலைய குற்ற எண்.23/2009, பிரிவுகள் 498(A), 406, 407, 307, 511, 354, 506(1) இதச மற்றும் உடன் இணைந்த பிரிவு 4 வரதட்சணை தடுப்புச்

சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. புகார் மனு ஏற்கனவே அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.3 ஆகும்.** மேற்படி அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் ஆய்வாளர் திருமதி.முத்துலெட்சுமி அவர்கள் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் சாட்சிகள் ஜெயலெட்சுமி, ஜெயபால் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 04.12.2009 ம் தேதி காலை 07.45 மணியளவில், கச்சிராயன்பட்டியில் உள்ள எதிரியின் வீட்டின் முன்பு வைத்து, 1 வது எதிரி சந்திரகுமார், 3 வது எதிரி சீதையம்மாள் ஆகியோரைக் காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து, திரேகப் பரிசோதனை செய்து, பாரா வசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். 1 வது எதிரி சந்திரக்குமாரை கைது செய்யச் செல்லும் போது, சாட்சி ஜெயபால் என்பவரை ஆய்வாளர் முத்துலெட்சுமி அவர்கள் அழைத்துச் சென்றபோது, 1 வது எதிரி சந்திரகுமார், ஜெயபாலை அவரது வலது பக்க தோள்பட்டையில் கடித்து காயத்தை ஏற்படுத்தியுள்ளார். அதனால் ஜெயபாலை மேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு ஆய்வாளர் அனுப்பி வைத்துள்ளார். 05.12.2009 ம் தேதி சாட்சிகள் துரைக்கண்ணு, ஆனந்தபாண்டியன், இராமதாஸ், பால்பாண்டி, தர்மராஜ், குமார் ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 03.03.2010 ம் தேதி சாட்சி ஜெயபாலுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுகன்யா அவர்களை விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த காயச்சான்று ஏற்கனவே அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 03.03.2010 ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவை 498(A), 406, 407, 307, 511, 354, 506(1) இதச மற்றும் உடன் இணைந்த பிரிவு 4 வரதட்சணை தடுப்புச் சட்டத்தில் இருந்து பிரிவுகள் 323, 498(A), 406, 407, 307, 511, 354, 506(1) இதச மற்றும் உடன் இணைந்த பிரிவு 4 வரதட்சணை தடுப்புச்

சட்டத்தின் படி பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அன்றைய தினமே, 1 வது எதிரி மீது, பிரிவுகள் 498(A), 406, 354, 307, 506(1), 323 இதச மற்றும் பிரிவு 4 வரதட்சணை கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2,3 எதிரிகள் மீது, பிரிவுக் 498(A), 406, 497, 307, 354, 506(1) இதச மற்றும் பிரிவு 4 வரதட்சணை கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 4 வது எதிரி மீது பிரிவுகள் 307, 354, 506(1) இதச படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>

இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அதசாஆ.3 முதல் தகவல் அறிக்கையில், இவ்வழக்கின் புகாரானது 04.12.2009 ம் தேதி அதிகாலை 06.00 மணிக்கு தபால் மூலம் பெறப்பட்டதாக குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அதிகாலை 06.00 மணிக்கு தபாலை சார்வு செய்தவற்கான நடைமுறை நீதித்துறையில் இல்லை என்றால் சரியல்ல. காவல் அடைப்பு அறிக்கையின் படி, 04.12.2009 ம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு எதிரியை கைது செய்ய கச்சிராயன்பட்டிக்கு சென்றதாக உள்ளது என்றால் சரிதான். 04.12.2009 ம் தேதி காலை 07.45 மணிக்கு எதிரிகள் கைது செய்யப்பட்டதாக கைது குறிப்பாணையில் உள்ளது என்றால் சரிதான். 04.12.2009 ம் தேதி காலை 06.00 மணிக்கு நீதிமன்ற உத்தரவின் பேரில், புகார் கிடைக்கப்பெற்றதாகச் சொல்லப்படும், அதே தேதியில் தான் 2 எதிரிகளும் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் உத்தரவில், ஆய்வாளர் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு கோப்பில், குற்றம் நடந்ததாகச் சொல்லப்படும் கச்சிராயன்பட்டியைச் சார்ந்த எந்த சாட்சிகளும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில், எந்த நேரத்தில், குழந்தை தவச்செல்வன்

அண்டாவில் மூடி வைக்கப்பட்டார் என்று சாட்சிகள் வாக்குமூலத்திலும், குற்ற இறுதி அறிக்கையிலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த குழந்தைக்கு செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் சுன்னத் கல்யாணம் பற்றி மருத்துவ அறிக்கை எதுவும் ஆய்வாளர் விசாரணையின் போது கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். 03.12.2009 ம் தேதிக்குள் அறிக்கை செய்யப்படவேண்டிய நீதிமன்ற உத்தரவானது, 04.12.2009 ம் தேதி தான் காவல்நிலையத்தில் பெறப்பட்டதாக அதசாஆ.3 முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் படி, மொத்தம் 4 எதிரிகள் தான் என்றால் சரிதான். காவல் அடைப்பு அறிக்கையில் 1 முதல் 5 எதிரிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு புகாரில் சொல்லப்பட்டுள்ள, புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட புகார் மனுவின் CSR பற்றியும், அதன் முடிவு பற்றியும் இந்த வழக்கின் விசாரணையின் எந்த பகுதியிலும், குற்ற இறுதி அறிக்கையிலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1 வது எதிரி, சாட்சிகள் 1 முதல் 3 வரையான சாட்சிகளுக்கு எதிராக, தனக்கு பாத்தியப் பட்ட 6 ¼ பவுன் நகையை திருப்பி தர புகார் கொடுத்து, அந்த புகாரின் விசாரணையில், 1 முதல் 3 சாட்சிகள் 1 வது எதிரியின் நகையை திருப்பி தருவதாக எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அவ்வாறு மேலூர் காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்த உறுதிமொழிக்கு எதிராக 1 முதல் 3 சாட்சிகள் நடந்து கொண்டதால் தான், 1 வது சாட்சி எதிரிகளுக்கு எதிராக, மேலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், இந்த வழக்கின் புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1 வது சாட்சிக்கு சேர வேண்டிய எந்த ஒரு பொருளும் 1 வது எதிரியிடம் கிடையாது என்றால் சரியல்ல. 1 வது எதிரிக்கு சேரவேண்டிய பொருட்கள் தான் 1 முதல் 3 சாட்சிகள் வசம் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1 வது எதிரிக்கும் 1 வது சாட்சிக்கும் இடையேயான திருமணம்,

1 வது சாட்சியின் தவறான நடத்தையின் காரணமாக விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1 வது சாட்சிக்கு பிறந்த, 2 வது குழந்தை, 1 வது எதிரிக்கு பிறக்கவில்லை என்ற பிரச்சனை காணரமாகவும், காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்தவாறு 1 முதல் 3 சாட்சிகள் நடந்து கொள்ள இயலாததால் தான், இந்த வழக்கில் எதிரிகள் மீது மேலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தனிப்புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக கள்ளர் சமூதாயத்தில் திருமணத்தின் போது கொடுக்கப்படும், நகைகள், பண்ட பாத்திரங்கள் குறித்து, கள்ளர் சமூதாயத்தில் பின்பற்றப்படும் ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில், 1 வது எதிரிக்கு கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் நகைகள், பண்டபாத்திரங்கள் குறித்து அது போன்ற ஆவணங்களை இந்த வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். திருமண முறிவின் போது, அவ்வாறு கொடுக்கப்பட்ட நகைகள், பண்ட பாத்திரங்கள் திருப்பி கொடுப்பதாக இருந்தால் அதையும் கள்ளர் சமூதாயத்தில் பராமரிக்கப்படும் ஆவணத்தில் எழுதி, அதில் பஞ்சாயத்தார்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் கையொப்பம் செய்வார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. இந்த வழக்கின் 4 வது எதிரி, மும்பையில் உள்ள சின்டிகேட் வங்கியில் ஓட்டுநராக பணிபுரியும் செல்வம் என்பவரின் மனைவி என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 4 வது எதிரி, அவரது கணவருடன் மும்பையில் வசித்து வந்தார் என்றும் அவரை எந்த வகையிலும் சம்பந்தம் இல்லாமல் இந்த வழக்கின் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. குற்ற வழக்கில், எதிரிகளுக்கு எதிராக சொல்லப்படும் குற்றங்கள் பற்றி, நேரடியாக பார்க்க சந்தர்ப்பம் உள்ள சாட்சிகள் கச்சிராயன்பட்டியைச் சேர்ந்தவர்கள் தான் என்றால் சரிதான். இந்த வழக்கின் குற்ற இறுதி அறிக்கையில் சொல்லியுள்ள எந்த குற்றச் சம்பவங்களையும் எதிரிகள் செய்யவில்லை என்றும், 1 வது சாட்சியின் தவறான நடத்தை குறித்து, 1 வது எதிரி, அவருக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்ததன் வன்மம்

காரணமாக இந்த வழக்கு, சாட்சிகளால் பின் யோசனை செய்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கை விசாரணை செய்த அப்போதைய புலன் விசாரணை அதிகாரி அவர்கள் வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல், எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 சாட்சிகளின் தூண்டுதலின் காரணமாக, அதிகாலை 06.00 மணிக்கு புகார் மனு கிடைக்கப் பெற்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு அன்றைய தேதியிலேயே, சாட்சிகள் மற்றும் அவர்களின் நண்பர்கள் துணையுடன் 1 மற்றும் 3 எதிரிகள் சட்ட விரோதமான முறையில் தாக்கி கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவின் படி இவ்வழக்கில் எந்த சாட்சிகளும் முறையாக விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சமூகநல அலுவலர் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு, சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை